செ.வெ.எண்: 23 நாள்: 14.03.2017

# அரியலூா் மாவட்டத்தில் சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்படுவதை குறித்து மதுரை உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர்களுடன் ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவா் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவா்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூா் மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியா் அலுவலகக் கூட்டரங்கில் சீமைக்கருவேலமரங்களை அகற்றுதல் குறித்து மதுரை உயர்நீதிமன்றம் உத்திரவின்பேரில் நியமிக்கப்பட்டுள்ள வழக்கறிஞர்கள் **திரு.சரவணகுமார் மற்றும் திரு.டேவிட் கணேசன்** ஆகியோருடன் ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவா் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவா்கள் தலைமையில் இன்று (14.03.2017) நடைபெற்றது.

**இதுகுறித்து, மாவட்ட ஆட்சியா் அவா்கள் தெரிவித்ததாவது :-**

இம்மாவட்டத்தில் அரசு கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களில் இதுவரை சுமார் 450 ஹெக்டேரில் உள்ள கருவேல மரங்கள் அகற்றப்பட்டுள்ளது. தற்போது தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் பொதுமக்களின் பட்டா நிலங்களில் உள்ள கருவேலமரங்களை அகற்ற விழிப்புணர்வு பிரச்சாரங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், நிலத்தடி நீர்மட்டத்தை பெரிதும் பாதிக்கும் கருவேல மரங்களை அகற்ற மதுரை உயர்நீதிமன்றம் உத்திரவிட்டதையடுத்து தமிழகம் முழுவதும் கருவேல மரங்களை அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனைத்தொடர்ந்து, இம்மாவட்டத்தில் வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை (குடிநீர் மற்றும் ஆற்றுப்படுகை), ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, இந்து சமய அறநலத்துறை, வனத்துறை, கால்நடைப்பராமரிப்புத் துறை, நகராட்சி, பேரூராட்சி உள்ளிட்ட அரசு கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள் மற்றும் பொதுமக்கள் பட்டா நிலங்களில் என 5400 ஹெக்டேரில் கருவேல மரங்கள் இருப்பு கண்டறியப்பட்டுள்ளது. இதில் அரசு கட்டுப்பாட்டில் உள்ள 2565 ஹெக்டேரிலும், பொதுமக்கள் பட்டா இடங்களில் 2838 ஹெக்டேரிலும் உள்ள கருவேலமரங்களை அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, அரியலூா் மாவட்டத்தில் அரசு கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் சுமார் 450 ஹெக்டேர் கருவேல மரங்களை அகற்றியுள்ளதை **மதுரை உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர்கள்** அரியலூா் நகரில் நெடுஞ்சாலைகளிலும், தவுத்தாய்குளம் உடையார் ஏரி, ஏலாக்குறிச்சி ஏரி, தூத்தூர் ஏரி ஆகிய இடங்களில் அகற்றப்பட்ட சீமைக்கருவேல மரங்களையும், மேலவரப்பங்குறிச்சி மற்றும் வைப்பூர் கொள்ளிடம் ஆற்றுப்படுகையிலும், கரைவெட்டி பரதூரில் உள்ள பறவைகள் சரணாலயத்திலும் சீமைக்கருவேல மரங்களை அகற்றிவரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர் என மாவட்ட ஆட்சித்தலைவா் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவா்கள் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூா்.**